Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 45

# பஞ்சமர் நாவல் காட்டும் விளிம்புநிலை வாழ்வியல்

**திருமதி க. மகாலெட்சுமி**
*உதவிப் பேராசிரியர். தமிழ்த்துறை.*
*ஜி.டி.என்.கலைக்கல்லூரி. திண்டுக்கல்,*
**மின்னஞ்சல்:** mahavishal2008@gmail.com

## *முன்னுரை*

பன்னெடுங்காலமாகப் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உட்பட்டு இன்னலுற்று வாழும் பஞ்சமா் என்று கூறப்படும் மக்களின் பிரச்சினைகளை உள்ளடக்கி எழுதப்பட்ட நாவல் பஞ்சமர்.சாதி அடக்கு முறையால் கண்ணீரும் கம்பலையுமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் மக்களுக்காக கே.டானியல் அவர்களால் எழுதப்பட்ட நாவலே பங்சமராகும்.எல்லோருக்குமான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தல் என்ற அடிப்படையிலும் வர்க்க அடிப்படையில் ஒன்றுபட்டு நிமிர்ந்து நின்று நில ஆதிக்கக்காரர்களால் சுமத்திவைக்கப்பட்டிருக்கும் நுகத்தடியை உடைத்தெறிய வேண்டுமென்ற வேட்கையிலும் எழுதப்பட்ட இந்நாவலில் பஞ்சமர் மக்களின் விளிம்புநிலை வாழ்வியலைச் சுருக்கமாக விரித்துரைக்க முறபட்டுள்ளது இக.கட்டுரை.

## பஞ்சமர்-சொற்பொருள் விளக்கம்

இலங்கைத் திருநாட்டில் உரிமை மறுக்கப்பட்டவர்களுள் குறிப்பிடக்கூடிய நளவன் பள்ளன் பறையன் வண்ணான் அம்பட்டன் என்ற இந்த ஐந்து சாதியினரையும் 'பஞ்சமர்' என்ற சொல்லுக்குள் அடக்கியுள்ளனர்.ஆனாலும் இந்த மக்கள் கூட்டத்தினரின் வாழ்க்கையோடு பெருமளவு ஒத்த வாழ்க்கை

உடையவர்கள் ‘பஞ்சமர்‘ என்ற கோட்டுக்கு அப்பாலும் வசிக்கின்றனர்.இவர்களுக்கும் பஞ்சமர் என்ற வரையறைக்குள் இருக்கும் மக்களுக்குமிடையே உள்ள முரண்பாடு மிகச்சிறிய அளவில்தான் உள்ளது

## கதைக்கரு

உயர்சாதியினர் எனப்படுவோர் தாழ்த்தப்பட்டோர் மீது நிகழ்த்தியுள்ள பல்வேறு கொடுமைகள் இந்நாவலில் விவரிக்கப் படுகின்றன. கொடுமைகளுக்கு எதிராகத் தாழ்த்தப்பட்டோரும் மனிதநேயம் கொண்ட உயர் சாதியினரில் ஒரு சிலரும் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளே கதையம்சமாக மலர்ந்துள்ளது.தாழ்த்தப்பட்டோரின் வர்க்க ரீதியான எழுச்சி இந்நாவலில் படம்பிடித்துக் காட்டப்படுகிறது.சாதித்திமிர் தளர்ந்து போவதாகக் காட்டப்பட்டிருப்பது நாவலின் உச்சகட்டம்.சாதி மீறிய காதல்மற்றும்பாலியல்உறவுஇந்நாவலில்முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.தாழ்த்தப் பட்டோரின் எழுச்சியினால் ஏற்பட்ட பாதிப்புகள் நாவலில் விரித்துரைக்கப்படுகின்றன.பஞ்சமரின் விடுதலை வேட்கையை அடிநாதமாகக் கொண்டுள்ளது நாவல்.வரலாற்றுப் படிமங்களாகவே நாவலின் கதையம்சங்கள் அமைந்துள்ளன.

## கதைச்சுருக்கம்

வேலுப்பிள்ளையின் மகள் கமலாம்பிகை.இவள் தன் கணவரோடு வாழவில்லை. மகள் மாம்பழத்தியுடன் வாழ்ந்து வருகிறாள். இவளுக்குத் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த செல்லப்பன் மீது தனிப் பிரியம்.செல்லப்பனின் மகள் முத்து.சாராயம் காய்ச்சி விற்கும் மாணிக்கத்தின் கடைக்குச் செல்லப்பன் உயர் சாதியைச் சேர்ந்த ஐயாண்ணன் ஆகியோர் செல்வது வழக்கம்.சிறாப்பரின் மகள் நடுவிலாள் காதலித்து வந்த சிறிசேனா இறந்து விடுகிறான். இறப்பிற்குச் சிறாப்பர் தான் காரணம் என்று ஐயுறுகின்றனர்.நடுவிலாளும் இறந்து விடுகிறாள்.கமலாம்பிகையின் மகள் மாம்பழத்திக்கும் கள் எடுத்துப் பிழைப்பு நடத்தும் கற்கண்டனுக்கும் காதல் இருந்து வந்தது.கற்கண்டன் இறந்து விடுகிறான். இது கமலாம்பிகையின் வேலையாக இருக்கக்கூடும் என்று ஐயுறுகின்றனர். கமலாம்பிகையின் வீட்டில் நடக்கும்அனைத்து நிகழ்வுகளும் சின்னாச்சிக்கு நன்கு தெரியும்.

இதற்கிடையில் நளவன் பள்ளன் பறையன் அம்பட்டன் வண்ணான் என்ற ஐந்து சாதியினரும் ஒன்று கூடிப் ‘பஞ்சமர்‘ என்ற பெயரில் ஐயாண்ணனின் வழிகாட்டுதலில் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் எழுப்புகின்றனர்.குமரேசன் கிருட்டிணன் குமாரவேலன் கார்த்திகேசு ஆகியோர் இவர்களுடன் இணைந்து கொள்கின்றனர்.உயர் சாதியினர் இவர்கள் தங்கியிருக்கும் நிலத்தைக் காலி செய்யச் சொல்கின்றனர்.அடிமை வாழ்வை நினைத்துக் குமரேசன்

குமுறுகிறான்.இதற்கிடையில் சின்னாச்சிக்குக் குமாரவேலுவைப் பார்த்ததும் உள்ளுக்குள் சந்தேகம் எழுகிறது.கமலாம்பாளின் மகள் மாம்பழத்தியின் முகமும் குமாரவேலுவின் முகமும் ஒரே மாதிரியாக இருப்பதுதான் சந்தேகத்திற்குக் காரணம்.

வேலுப்பிள்ளை கண் ஆபரேசனுக்குச் சென்றிருந்த சமயம் கணவன் சங்கரப்பிள்ளையுடன் வாழாத கமலாம்பாள் குழந்தை பெற்றதும் குழந்தையை வேறு ஊரில் விட்டு விட்டதும் சின்னாச்சிக்கு நன்கு தெரியும்.அந்தக்குழந்தைதான் குமாரவேலனாக இருக்கும் என்பதே சின்னாச்சியின் சந்தேகமாக இருந்தது.மாம்பழத்தியின்அண்ணன்தான் குமாரவேலன் என்பது சின்னாச்சியின் அசைக்க முடியாத நம்பிக்கை.மாம்பழத்திக்குத் திருமணம் செய்து வைக்க மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தனர்.கிருட்டிணன் வீட்டு வேப்ப மரத்தடியில் தான் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.கார்த்திகேசன் சுடப்பட்டார்.குமாரவேலனால் முதியோர் பாடசாலை நடத்தப்பட்டது.கமலாம்பாள்தான் தன்னைப் பெற்ற பத்தினி என்பதைக் குமாரவேலன் அறிந்து கொண்டான்.மாம்பழத்தி திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்ததால் சின்னாச்சியின் உதவியை நாடுகிறாள் கமலாம்பிகை. அந்தச் சூழ்நிலையில் குமாரவேலனை அடையாளம் கண்டுகொண்டாள் கமலாம்பிகை. மாம்பழத்தி சின்னாச்சியின் அறிவுரையால் இங்கிலாந்துக்காரனைத் திருமணம் செய்யச் சம்மதித்து விடுகிறாள்.குமாரவேலன் சுடப்படுகிறான்.செல்லப்பனின் மகள் முத்து குமாரவேலன் தன் தந்தைக்குப் பிறந்தவன் தான் என எண்ணுகிறாள்.

திருமணமான மாம்பழத்திக்குக் குழந்தை பிறந்து விட்டது.இச்சூழ்நிலையில் விதானையாருக்கும் கமலாம்பாளுக்குக் கருத்து முரண்பாடு ஏற்பட்டு உறவு பகையில் முடிந்தது.சின்னாச்சி விதானையார் வீட்டிற்கு வேலைக்குச் செல்கிறாள். சின்னாச்சியிடமிரந்து கமலாம்பாளின் வீட்டு விசயங்களை அறிந்துகொள்கிறார் விதானையார்.இவர்கள் கேட்கும் கூலிக்கு ஒத்துக் கொள்கிறார் விதானையார்.வேலுப்பிள்ளை வீட்டார் இதற்கு உடன்படவில்லை.போராட்டக்காரர்கள் சாதி நோய் ஒழிய வேண்டும் சமூக முறையில் மாற்றம் வேண்டும் எனப் போராடுகின்றனர்.வேலுப்பிள்ளை வீட்டு நடுகைப் பணிக்கு யாரும் செல்லவில்லை..சமரசப் பேச்சில் வல்லிபுர வாத்தியார் ஈடுபடுகிறார்.

மாம்பழத்தி தாய்நாட்டிற்குத் திரும்ப உத்தேசித்ததால் வீட்டைச் சிறந்த முறையில் கட்ட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.சாதி வித்தியாசம் பார்க்காமல் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதை வலியுறுத்தி ஊர்வலத்திற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.செல்லப்பன் கமலாம்பிகை உறவு பற்றிய பேச்சு அடிபடுகிறது.திருவிழாவில்

பஞ்சமருக்கென்று தனி இடம் ஒதுக்கப்படுகிறது.உழுபவனுக்கே நிலம் குடியிருப்பவனுக்கே காணி என்பன போன்ற கோசங்களை வலியுறுத்தி ஊர்வலம் நடக்கிறது. போலீசார் தடை விதிக்கின்றனர்.போராட்டக்காரர்கள் பஞ்சப்பட்ட மக்களை ஒன்றிணைக்கின்றனர்.

விதானையாரின் வேலையாள் மாயாண்டி இவர்களிடம் தஞ்சம்புகுகிறான்..கோவில்திறப்புபற்றியபேச்சுஎழுகிறது.சண்முகம்பிள்ளையின் இறப்பிற்குக் குடிமைகள் யாரும் வரவில்லை.அடக்கம் செய்யப் புதுமுறை கடைபிடிக்கப்பட்டது.மாம்பழத்தி புதுமனை புகுவிழா நடத்துகிறாள்..ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்று நிருவாக சபைக் கூட்டத்தில் முடிவு செய்து கோவிலுக்குள் பிரவேசிக்கின்றனர்.கோவில் கதவு மூடப்படுகிறது.மாயாண்டி இறந்து விடுகிறான்.ஐயாண்ணன் சரிந்து விழுகிறார்.ஆலயப்பிரவேசம் பற்றிய செய்திகள் வெளிவருகின்றன.

## விளிம்புநிலை வாழ்வியல்

சமுதாயத்தில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.விளிம்புநிலையில் வாழும் மக்கள் தங்களுடைய தொழில் அடிப்படையிலும் சாதி மதம் என்ற அடிபட்படையிலும் தங்களைத் தாழ்த்திக் கொள்கின்றனர்.பொருளாதார அடிப்படையில் வறுமைக் கோட்டிற்குக் கிழ் வாழ்பவர்களின் வாழ்வியலும் தாழ்த்தப் பட்டவர்களின் வாழ்வியலும் விளிம்புநிலை வாழ்வியலாக உள்ளன.இவர்களையே விளிம்பு நிலையில் வாழும் மக்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

## பஞ்சமர் நாவல் காடடும் விளிம்புநிலை வாழ்வியல்

நாவலில் பஞ்சமர் சமூகத்தினர் தாழ்த்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வாழ்ந்து வந்தனர்.குறைவான கூலியைப் பெற்றுக் கொண்டு வேலை பார்த்தனர்.கோவிலுக்குள் செல்ல இவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.உயர் சாதியைச் சார்ந்த பெண்களால் காதலிக்கப் பட்டால் கொலை செய்யப்பட்டனர்.சுகபோகத்தை அனுபவிப்பதற்காக உயர்சாதியைச் சேர்ந்த பெண்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஆண்களைப் பயன்படுத்தினார்கள் என்ற கருத்து இந்நாவலில் இடம் பெறுகிறது.யாழ்ப்பாணச் சமூகத்தில் பல்வேறு அடக்குமுறைகட்கு உட்பட்டிருந்த பஞ்சமர் சமூகத்தினர் அறிவும் உணர்வும் பெற்றுக் கூட்டம் கூட்டமாகத் தங்களைப் பிணித்திருந்த தளைகளை அறுத்தெறியும் காட்சிகளையே கதையாக்கியிருக்கிறார் ஆசிரியர். அடிநிலை மாந்தரின் விடுதலை வேட்கை உயர் சாதியினர் எனப்படுவோரின் அகக் குறைபாடுகள் ஆகியவற்றை எடுத்துரைத்திருக்கிறது இந்நாவல்.வாழ்வின் கடைசிப் படியிலிருந்து முன்னேறிச் செல்ல மக்கள் கூட்டத்தினர்

எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளே கருவாகவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களே கதைமாந்தர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.

## முடிவுரை

மனித இனத்தின் வரலாறு அன்றிலிருந்து இன்று வரை ஒரு யுத்தமாகவே இருந்து வருகிறது.இந்த யுத்தம் இன்றோ நாளையோ முடிந்து விடக்கூடிய ஒன்றல்ல.உலகத்தையெல்லாம் ஒரு வர்க்கம் ஆளுகைக்குட்படுத்தும் வரை இந்த யுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கும்.யுத்தத்தின் ஒரு பகுதியாகவே இந்நாவல் விளங்குகிறது எனலாம்.ஈழத்தின் நவீன படைப்பிலக்கிய வரலாற்றில்சாதிப்பிரச்சினை என்ற சமூக எதார்த்தம் நாவலில் படம் பிடித்தக் காட்டப்பட்டுள்ளது.தலித் என்று பெயரிடாமல் பஞ்சமர் என்ற தலைப்பில்தலித்திய இலக்கியம் படைத்தவர் டானியல்.எல்லாம் எல்லோருக்குமான சுதந்திரம் என்பதற்காகப் பாடுபட வேண்டும் என்ற எண்ணத்தை நம்மிடையே உருவாக்குவதாக நாவல் அமைந்துள்ளது.தலித் பண்பாட்டில் தலித் அரசியலில் தலித்திய மக்களின் விடுதலை வேட்கையில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் படிக்கக்கூடிய நாவலாகப் பஞ்சமர் நாவல் அமைந்துள்ளது.

## துணைநின்ற நூல்

டானியல்.கே.(2008).,*பஞ்சமர்*,அடையாளம் பதிப்பகம்,சென்னை.